# எளிமைத் தமிழ் இலக்கணம்

## தோற்றுவாய்

**மா**, பலா, வாழை ஆகிய முக்கனிச் சுவையைவிட மிக இனிய நமது செந்தமிழ் மொழியில் வெளிவந்த இலக்கிய நூல்களும் இலக்கண நூல்களும் பலவாகும். இம்மொழியைப் பிழை இல்லாமல் படிக்கவும், எழுதவும் ஐந்து வகை இலக்கணங்களுமே தேவைப்படுகின்றன. எல்லா இலக்கண நூல்களையும் கற்றுத் தெளிதல் அனைவராலும் முடியும் என்று எண்ணிவிட முடியாது. குறுகிய காலத்தில் சிறிது முயன்றாலே இலக்கணங்களை எல்லாம் கற்றுத் தெளியலாம் என்ற நல்ல எண்ணங்கொண்டே இந்த எளிமைத் தமிழ் இலக்கணம் என்ற நூல் வெளிவருகின்றது.

தமிழ் மெர்ழியில் உள்ள ஐந்து இலக்கணங்களும் வருமாறு. அவை: எழுத்திலக்கணம், சொல்லிக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்பன ஆகும். ஐந்து இலக்கணங்களுக்கும் மூலமாக விளங்குவது எழுத்திலக்கணமேயாகும்.

மொழிக்கு முதல் காரணம் அணு. அணுத்திரளின் காரியமே ஒலி. ஒலியாலானதே எழுத்து. அணுக்களைப் பொருத்தமாக அமைக்கும்பொழுது, பலவகையான ஒலிகள் உண்டாகின்றன. அசையும் பொருள், அசையாப் பொருள் என்பன, நிலம், நீர், தீ, காற்று, வானம் என்னும் ஐந்து பெரும் பூதங்களின் கூட்டுறவால் எழுந்தனவேயாகும். அப்பொருள்களால் உண்டாகும் ஓசைகளோ மிகப் பலவாகும். ஓசையால் உண்டாகும் எழுத்தின் தன்மைகளை இனி விளக்கமாக அறிவோம்.

# எழுத்து

நாம், நமது உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களைப் பிறருக்கு அறிவிக்க ஆசைப்படுகின்றோம். அப்பொழுது நம் நுரையீரலில் உள்ள காற்று மேல் எழுந்து மார்பு, கழுத்து, மூக்கு, தலை ஆகிய நான்கு இடங்களில் பொருந்தி வெளிப்படும்பொழுது ஒலியை உண்டாக்குகிறது. அவ்வாறு வெளிப்படும் ஒலியை நா, பல், மேல்வாய், உதடு, ஆகிய உறுப்புகள் பல்வேறு வகை எழுத்து ஒலியாய் மாற்றுகின்றன.

வாய் வழியாக வரும் எழுத்து ஒலிகளைக் காதுகளால் கேட்கின்றோம். அந்த ஒலிகளைக் கையால் எழுதும் பொழுது கண்களால் காண்கிறோம். காதுகளால் கேட்கும் பொழுது ஒலி வடிவத்தையும், கண்களால் காணும்பொழுது வரி வடிவத்தையும் பெறுகின்றன.

அந்த எழுத்துக்கள் சொல்லுக்கு முதல் காரணமாயும், அணுக்கூட்டத்தின் செய்கையாயும் அமையும் ஒலியே எழுத்து எனப்படும். இது எழுப்பப்படுவதனாலும் எழுத்து எனப் பெயர் பெற்றது.

சொல்லுக்கு முதல் காரணமாயும், அதன் உறுப்பாயும், அமைதியாக ஒலியானது எழுத்து எனக் கொள்ளுதல் கூடாது. இதை என்றும் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

எழுத்து முதல், சார்பு என இருவகைப்படும். முதல் எழுத்து என்பது மொழி உண்டாவதற்கு மூலமான எழுத்து ஆகும். முதல் எழுத்து இல்லையென்றால் மொழி இல்லை. பிற எழுத்துக்களும் இல்லை.

## சொல் இலக்கணம்

சொல், பதம், மொழி என்பன ஒரு பொருள் பலசொற்களே. சில எழுத்துகளை ஒன்று சேர்த்தால் சொல்லாகி விடும் என்று எண்ணுதல் கூடாது. சேமுதுபு என்ற எழுத்துக்கள் சொல்லாக வில்லை. பொருள் பயன் - உடையதே - சொல்லாகும். அச் சொற்களின் பாகுபாட்டை விளக்குவதே சொல் இலக்கணம்.

## பொருள் இலக்கணம்

சொற்கள் பல சேர்ந்தே வாக்கியம். வாக்கியங்கள் பல கொண்ட ஒன்றையே நூல் என்கின்றோம். நல்ல கருத்துகள் அமைந்திருப்பதே சிறந்த நூலாகும். அக் கருத்தாகிய பொருள்களோ, அகப் பொருள், புறப்பொருள் என்பன ஆகும். இப் பொருள்களைப் பற்றிக் கூறுவதே பொருள் இலக்கணமாகும்.

## யாப்பு இலக்கணம்

செய்திகளை ஓசை நயத்தோடு கூறுவதே அனைவருக்கும் விருப்பம். ஓசை நயம் உடையது செய்யுள். அச் செய்யுளின் அமைப்பை விளக்கிக் கூறுவதே யாப்பு இலக்கணமாகும்.

## அணி இலக்கணம்

இனிய ஓசையோடு கூறும் செய்திகளைக் கேட்பவர் உள்ளம் கொள்ளுமாறு அழகுபடுத்துவதே அணியாகும். இயற்கை அழகோடு செயற்கை அழகும் சேர்ந்தால் எப்படி ஒரு பொருள் சிறக்கிறதோ, அவ்வாறே ஒரு கருத்தை அழகுபடுத்திக் கூறுவதே படிப்போர் உள்ளத்தைக் கவரும். உள்ளங் கவரும் அளவிற்கு அழகுபடுத்திக் காட்டுவதே அணி இலக்கணமாகும்.

என்பது தெளிவாக விளங்கும். அளவை அடிப்படையாகக் கொண்டு உயிர் எழுத்துக்களில் இரண்டு பிரிவுகள் உண்டாயின.

## சுட்டெழுத்துகள்

கருத்துப்பொருளை நோக்கி மீண்டும் இரு பிரிவுகள் உயிர் எழுத்துக்களில் உண்டு. அவை: சுட்டு எழுத்துக்கள், வினா எழுத்துக்கள் என்பன. ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுவது 'அ' என்னும் உயிராகும். அண்மையில் உள்ள பொருளைச் சுட்டுவது 'இ' என்னும் உயிராகும். தொலைவில் உள்ள பொருளைச் சுட்டுவது 'உ' என்னும் உயிராகும். ஆகவே, அ, இ, உ என்ற மூன்று எழுத்துக்களும் பொருள்களைச் சுட்டிக் காட்டும் சுட்டெழுத்துக் களாகும்.

சுட்டுதல் = பொருளைக் குறிப்பிடுதல்.

சுட்டு இருவகைப்படும், அவை: அகச் சுட்டு, புறச்சுட்டு என்பன. சுட்டெழுத்துத் தனித்து நிற்காமல் சொல்லோடு கலந்திருந்து ஒன்றைச் சுட்டிக் காட்டுவது அகச் சுட்டாகும். இதைத் 'தனிமொழிச் சுட்டு' என்றும் கூறலாம். சொல்லில் இருந்து சுட்டெழுத்தைப் பிரித்தால் சுட்டுப் பொருள் சிதைந்து விடும்.

சுட்டெழுத்துச் சொல்லுக்கு வெளியில் இருந்து ஒன்றைச் சுட்டிக் காட்டுவது புறச் சுட்டாகும். இதைத் தொடர்மொழிச்சுட்டு, என்றும் கூறலாம். சுட்டெழுத்தைச் சொல்லில் இருந்து பிரித்தாலும் பொருள் சிதையாது.

எ-டு: அவன், அவள், அவர், அது, அவை
இவன், இவள், இவர், இது, இவை

உகரம் அகச் சுட்டாக வருதல் உலக வழக்கில் பெரிதும் குறைந்து விட்டது. இவை அகச்சுட்டுகளாகும்.

அம் மனிதன், அப்பொருள், இம் மனிதன், இப் பொருள் இவை அனைத்தும் புறச்சுட்டுகளாகும். அம்பலம், இக்கட்டு என்ற

சார்பு எழுத்து என்பது பிற எழுத்துக்களின் கூட்டுறவால் பிறப்பதாகும். அதாவது முதல் எழுத்துக்களின் துணை கொண்டு பிறக்கும் என்பதாகும்.

## முதல் எழுத்து

முதல் எழுத்து, உயிர், மெய் என இருவகைப்படும். உயிர் எழுத்துக்கள் உயிரைப்போல தனித்து இயங்கும் தன்மை உடையன. அவை; அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன.

உயிர் எழுத்துக்களில் குறில், நெடில் என இரு பிரிவுகள் உண்டு. கால அளவைக் கணக்கிட்டு இரண்டாகப் பிரித்தனர் இலக்கணப் புலவர்கள். குறில் என்றாலும் குற்றெழுத்து என்றாலும் ஒன்றே. நெடில் என்றாலும் நெட்டெழுத்து என்றாலும் ஒன்றே. ஒருவன் பிறந்த ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தம்பி என்றும், அண்ணன் என்றும் கருதுவதுபோல் ஓசையால் எழுத்துக்களைப் பிறப்பிக்கும் கால அளவைக் கொண்டு குறில் என்றும் நெடில், என்றும் கொள்ளுதல் வேண்டும். குறுகிய ஓசையை உடைய எழுத்து குறில். நீண்ட ஓசையை உடைய எழுத்து நெடில். குறுகிய ஓசையுடைய குறில் ஒரு மாத்திரை அளவைப் பெறும். நீண்ட ஓசையுடைய நெடில் இரண்டு மாத்திரை அளவைப் பெறும். மாத்திரை என்பது பெருவிரலும் நடுவிரலும் இயல்பாக ஒன்று கலந்து அழுத்திவிடும் நேரம் அல்லது கண்கள் இயல்பாக இமைக்கும் நேரம் என்று கொள்ளுதல் வேண்டும்.

அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து எழுத்துக்களும், குற்றெழுத்துக்களாகும். இவற்றைத் தனித்தனியே சொல்லிப் பாருங்கள். ஒவ்வோர் எழுத்தும் ஒரு நொடிப் பொழுதிலேயே முடியும் என்பது விளங்கும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழு எழுத்துக்களும் நெட்டெழுத்துக்களாகும். இவற்றைத் தனித்தனியே சொல்லிப் பாருங்கள். ஒவ்வோர் எழுத்தும் இரண்டு நொடி நேரங் கொள்ளும்

## மெய் எழுத்துகள்

உயிரில்லா உடம்பைப் போன்றது மெய் எழுத்து. மெய் என்றால் உடல். மெய் எழுத்துக்கள் 18 ஆகும். அவை க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என்பன.

உயிர் எழுத்துக்கள் ஓசையின் காரணத்தால் குறில், நெடில் என இரண்டாகப் பிரிந்தது போல, இனத்தின் காரணமாக மெய் எழுத்துக்கள் மூன்றாகப் பிரிகின்றன. இனம் என்றாலும் கணம் என்றாலும் ஒன்றே.

வல்லினம் : க் ச் ட் த் ப் ற் என்ற ஆறுமாகும். இவை வலிந்த ஓசை பெற்றுள்ளதால் வல்லினம் என்று பெயர் பெற்றுள்ளன.

மெல்லினம் : ங் ஞ் ண் ந் ம் ன் என்ற ஆறுமாகும். இவை மெலிந்த ஓசை பெற்றுள்ளதால் மெல்லினம் என்று பெயர் பெற்றுள்ளன.

இடையினம் : ய் ர் ல் வ் ழ் ள் என்ற ஆறுமாகும். இவை வன்மையும் மென்மையும் இல்லாமல் நடுத்தரமான ஓசை பெற்றுள்ளதால் இடையினம் என்று பெயர் பெற்றுள்ளன.

## எழுத்துக்கள் பிறப்பிடமும் முயற்சியும்

**பிறப்பிடம்** : உயிர் எழுத்துக்கள் 12-ம், இடையின எழுத்துக்கள் 6-ம் கழுத்தில் பிறக்கும். மெல்லின எழுத்துக்கள் 6-ம் மூக்கைப் பிறப்பிடமாகக் கொள்ளும். வல்லின எழுத்துக்கள் 6-ம் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும். ஆய்தம் உச்சியை இடமாகக் கொண்டு பிறக்கும்.

**முயற்சி** : உதடு, நாக்கு, பல், வாய் ஆகிய நான்கின் முயற்சியால் வெவ்வேறு வகைப்பட்ட எழுத்தாகிய ஒலிகளாய்த் தோன்றும்.

**குறிப்பு** : நிறைந்த உயிரின் முயற்சியால் உள்ளே நிலைத்து இருக்கும் காற்றானது வெளியில் வரும் பொழுதே எழுத்தின் ஒலிகள் வெளிப்படும் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

சொற்றொடரில் உள்ள 'அ' 'இ' என்ற எழுத்துக்கள் புறச்சுட்டு ஆகா. இவை பொருளைக் குறிப்பிடும் சொற்களே ஆகும். சுட்டுச் சொற்கள் அல்ல.

## வினா எழுத்துகள்

வினா என்பது வினாவுதல் என்பது பொருள். ஒரு பொருளைக் கருத்தில் கொண்டு ஒருவரிடம் கேட்பது வினா ஆகும். வினாவுதல் = கேள்வி கேட்டல்.

வினா எழுத்துக்கள் ஐந்து. அவை எ, ஆ, ஓ, ஏ என்ற நான்கு உயிர்களாகும். 'எ' என்னும் எழுத்து சொல்லுக்கு முதலில் இருந்து வினாவாக வரும். 'ஆ' 'ஓ' என்ற எழுத்துக்கள் சொல்லுக்குக் கடைசியில் இருந்து வினாவாக வரும். 'ஏ' என்னும் எழுத்து சொல்லுக்கு முதலிலும் கடைசியிலும் இருந்து வினாவாக வரும். 'யா' என்னும் உயிர்மெய் எழுத்தும் சொல்லுக்கு முதலில் இருந்து வினாவாக வருதல் உண்டு.

வினா அகம், புறம் என இருவகைப்படும். வினா எழுத்து தனித்து நின்று வினாவாக வராமல் சொல்லோடு கலந்திருந்து வினாவாக வருவது அகவினா எனப்படும். வினா எழுத்தைப் பிரித்து விட்டால் சொல்லின் பொருள் சிதைந்துவிடும். வினா எழுத்து சொல்லுக்கு வெளியில் இருந்து வினாவாக வருவது புறவினா எனப்படும்.

எ-டு: எவன்? எவள்? எவர்? எது? எவை? ஏது?(யாது?)

இவை அனைத்தும் அக வினாவாகும்.

அவனோ? அவளோ? அவரோ? அதுவோ? அவையோ?

அவனே? அவளே? அவரே? அதுவே? அவையே?

இவை அனைத்திலும் உள்ள 'ஆ ஓ, ஏ' என்ற மூன்று உயிரும் சொல்லின் கடைசியில் இருந்து வினாப்பொருளைத் தருகின்றன என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

எப் பொருள்? அப் பக்கமா? அம் மாடோ? அம் மனிதனோ?- இவை புற வினாவாகும்.

# உயிர்மெய் எழுத்துகள்

கட்டிக்கு இலை ஆதரவு இலைக்குக் கட்டி ஆதரவு என்பது பழமொழி. முதலாளியின் ஆதரவு இல்லாமல் தொழிலாளி வாழ முடியாது; தொழிலாளியின் துணையில்லாமல் முதலாளியும் வாழ முடியாது. உயிரின் ஆதரவு இல்லாமல் மெய் செயல்படாது. மெய்யின் துணையில்லாமல் உயிரும் செயல்படுவது அரிதாகும். மெய்யும் உயிரும் கூடியதே உயிர்மெய்.

**விளக்கம்**

| | |
|---|---|
| க்+அ = க | ம்+அ = ம |
| ங்+அ = ங | ய்+அ = ய |
| ச்+அ = ச | ர்+அ = ர |
| ஞ்+அ = ஞ | ல்+அ = ல |
| ட்+அ = ட | வ்+அ = வ |
| ண்+அ = ண | ழ்+அ = ழ |
| த்+அ = த | ள்+அ = ள |
| ந்+அ = ந | ற்+அ = ற |
| ப்+அ = ப | ன்+அ = ன |

இவ்வாறே 18 மெய் எழுத்துக்களின்மேல் 12 உயிர் எழுத்துக்களை ஏற்றிப் பார்த்தால் உயிர்மெய் எழுத்துக்கள் உண்டாகும் தன்மை எளிதில் விளங்கும் என்பது உறுதி.

மெய் 18, உயிர், 12, 18 மெய்களின் மேல் 12 உயிர் எழுத்துக்கள் பொருந்தும்பொழுது 216 உயிர்மெய் எழுத்துக்கள் வெளிப் படுகின்றன.

மெய் 18, உயிர்க்குறில் 5, 18 x 5 = 90 உயிர்மெய்க் குறில்கள் ஆகும்.

மெய் 18, உயிர் நெடில் 7, 18 x 7 = 126 உயிர் மெய் நெடில்கள் ஆகும்.

ஙகர இனத்தில் ஙகர மெய்யும் (ங்) ஙகர உயிர்மெய்யும் (ங) நீங்கலாக மற்றைய 18 ஙகர உயிர்மெய் எழுத்துக்கள் சொற்களில் வந்து ஒலிப்பதாகக் காணப்படவில்லை. ஆகவே 216 உயிர்மெய் எழுத்துக்களில் 11 ஙகர உயிர்மெய் எழுத்துக்கள் நீங்க, இருக்கும்

பிறந்து விடும். எனவே வாய் திறந்து மூடும் தருவாயில் ஆய்தம் பிறக்கும் என்று அறிக.

**புற நடை :** அனைத்து எழுத்துக்களும் பிறப்பிடம் ஒன்றாகக் கூறப்பட்டாலும், உயர்த்திச் சொல்லுதல், தாழ்த்திக் கூறுதல், உயர்த்தியும், தாழ்த்தியும் கூறுதல் என்ற எழுத்திற்கு உரிய ஒலி முயற்சியால் ஒன்றிற்கு ஒன்று பிறப்பு வேறுபாடுகளும் அந்த அந்த எழுத்துக்களில் சிறிது சிறிது உள்ளன என்பதை யாரும் மறத்தல் கூடாது.

பண்டைய இலக்கணப் புலவர்கள் ஒவ்வோர் எழுத்தையும் சொல்லிச் சொல்லி, எந்தெந்த எழுத்து எங்கே பிறக்கின்றன என்பதையும், எதனெதன் முயற்சியால் எந்த எந்த எழுத்து எந்த எந்த நிலையில் பிறக்கின்றது என்பதையும் கூர்த்த மதியினால் அறிந்து தெளிந்த பிறகே எழுத்தின் பிறப்பிடத்தை - முயற்சியைத் தெளிவாக இலக்கணத்தில் விளக்கி இருக்க வேண்டும்.

## சார்பு எழுத்துகள்

மற்றோர் எழுத்துக்களின் துணை கொண்டு அல்லது ஒரு சொல்லின் சார்பு கொண்டு வருதல் சார்பெழுத்தாகும். தனித்து இயங்காமல் ஒன்றைச் சார்ந்து வருவதால் இவை சார்பு எழுத்துக்கள் என்று பெயர் பெற்றுள்ளன. அவை வருமாறு

| | | |
|---|---|---|
| 1. | உயிர்மெய் | 216 |
| 2. | முற்றாய்தம் | 8 |
| 3. | உயிரளபெடை | 21 |
| 4. | ஒற்றளபெடை | 42 |
| 5. | குற்றியலிகரம் | 37 |
| 6. | குற்றியலுகரம் | 36 |
| 7. | ஐகாரக்குறுக்கம் | 3 |
| 8. | ஔகாரக் குறுக்கம் | 1 |
| 9. | மகரக் குறுக்கம் | 3 |
| 10. | ஆய்தக் குறுக்கம் | 2 |
| | ஆக சார்பின் விரி | 369 |

எ.டு. 'அ ஆ' என்ற எழுத்துக்கள் வாய் திறத்தலின் தொழிலால் தோன்றும்.

'இ, ஈ, எ, ஏ, ஐ' என்ற ஐந்து எழுத்துக்களும், வாய் திறத்தலாகிய தொழிலோடு, மேல் வாய்ப் பல்லினை நாவின் ஓரமானது பொருந்தத் தோன்றும்.

'உ, ஊ, ஒ, ஓ, ஔ' என்ற ஐந்து எழுத்துக்களும், பிறப்பதற்குக் காரணமான முயற்சி உதடுகள் குவிதலேயாகும்.

'க, ங' - என்பன நாவின் அடி மேல் வாயினது அடியையும், 'ச, ஞ' - என்பன நாவினது நடு மேல்வாயினது நடுவையும், 'ட, ண' - என்பன நாவினது கடை (கடைசி) மேல் வாயினது கடையையும் பொருந்த முறையாகத் தோன்றும்.

'த, ந' - என்னும் எழுத்துக்கள் மேல் வாயினது அடியை நாவினது நுனி (முன்பகுதி) பொருந்தத் தோன்றும்.

'ப, ம' - என்னும் எழுத்துக்கள் மேல் உதடும், கீழ் உதடும் பொருந்தத் தோன்றும்.

'ர', 'ழ' - என்னும் எழுத்துக்கள் மேல் வாயின் நாவினது நுனி தடவுதலால் தோன்றும்.

'ய' என்ற எழுத்து நாவினது அடியானது மேல் வாயினது அடியைப் பொருந்தத் தோன்றும்.

மேல் வாயினது பல்லின் அடிப்பகுதியை நாவின் ஓரம் தடித்து (வீங்கி) நெருங்க 'ல' -வும் மேல் வாயினை நாவின் ஓரம் தடித்துத் தடவ 'ள' வும் தோன்றும்.

மேல் வாயினை நாவினது நுனி மிகுதியாகப் பொருத்தினால் 'ற, ன' - என்ற இரண்டு எழுத்துக்களும் பிறக்கும்.

மேல் வாயினது பல்லினைக் கீழ் உதடானது பொருந்த 'வ' - என்ற எழுத்துப் பிறக்கும்.

உள் நின்ற காற்று வெளியில் வரும்போது வாய் திறக்காமல் இருந்தால் உச்சியைப்போய்த் தாக்கி மீளும். அது சமயம் நாம் வாய் திறந்து மூடும் நிலையில் இருந்தால் போதும். அப்பொழுது ஆய்தம்

வழங்குகின்றோம். அளபு + எடை, உயிரோசையின் அளவை அதிகமாக எடுத்தல்.

செய்யுளில் ஓசை குறைந்த இடத்தில் மொழிக்கு முதலிலும், நடுவிலும், கடையிலும் நிற்கும் ஏழு நெட்டெழுத்துகளும், குறைந்த ஓசையை நிறைவு செய்யத் தம் தம் மாத்திரையில் இருந்து மிகுந்து ஒலிக்கும். அந்த நெட்டெழுத்துகளுக்கு முன் (இடமுன்) அதனதன் இனமான குற்றெழுத்து வரி வடிவத்தால் அடையாளமாக வரும்.

ஏழு நெட்டெழுத்துகளில் ஔகாரமாகிய நெடில் மொழிக்கு முதலில் மட்டும் அளபெடுக்கும். நடுவிலும் கடைசியிலும் வருவதில்லை. எனவே, அந்த இரண்டைக் கழிக்க அளபடைகள் பத்தொன்பதாகும். இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை இரண்டையும் கூட்ட உயிரளபெடை இருபத்து ஒன்றாகும்.

**இன்னிசை அளபெடை** : ஓசையில் இன்பம் தருவதற்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடையாகும். குற்றெழுத்து, நெட்டெழுத்தாகி அளபெடுக்கும். குறிலாக இருந்தாலும் செய்யுளின் யாப்புக் கெடுவதில்லை. சொல்லின் கடைசியில் 'உ' என்னும் உயிரெழுத்து அளபெடையாக வரும். மூவசைச் சீரிலேயே இந்த அளபெடை வரும்.

ஏ-டு கெடுப்பதூஉம், எடுப்பதூஉம், உடுப்பதூஉம்

உண்பதூஉம், துன்புறூஉம், இன்புறூஉம்

**சொல்லிசை அளபெடை** : பெயர்ச்சொல் வினை எச்சப் பொருளைத் தருவதற்காக அளபெடுப்பது சொல்லிசை அளபெடையாகும். இது 'இ' என்னும் உயிர் எழுத்தில் முடியும். 'இ' என்னும் உயிரை நீக்கி விட்டால் ஓரசைச் சீராக இருக்கும்.

## ஒற்றளபெடை

உயிர் எழுத்துக்களைப் போலவே சில மெய் எழுத்துக்களும் செய்யுளில் ஓசை நிறைப்பதற்கு அளபெடுத்து வருதல் உண்டு.

உயிர்மெய் எழுத்துக்கள் 205 என்று கொள்ளுதலும் பிழையாகாது. இக் கருத்தைத் தமிழ் உலகம் ஏற்றுக் கொள்ளும் என்று கருதுகிறோம்.

## முற்றாய்தம்

முற்றாய்தம் ஓசையில் குறையாத ஆய்தம். ஆய்த எழுத்து மூன்று புள்ளி வடிவத்தோடு விளங்கும். இதை அடுப்புக் கூட்டு எழுத்து என்றும், கேடக எழுத்து என்றும் கூறுவதுண்டு. கேடகம் என்பது வாட் போரில் தன்மீது வாள் தாக்காதபடி இடது கையால் தாங்கிப் பிடிக்கும் ஒரு கருவி.

ஆய்த எழுத்திற்கு முன் குற்றெழுத்தையும், அடுத்து வரும் எழுத்தாக உயிர் ஏறிய வல்லின எழுத்துகள் ஆறனுள் ஒன்றையும் பெற்று இடையில்வரும் ஆய்தம் என்பது நினைவில் கொள்ளுதல் வேண்டும். இது ஒரு மொழியில் வரும். வல்லின உகரத்தைக் கடைசியில் பெற்று வரும் ஆய்தம் ஆறோடு, புணர்ச்சி வகையால் வரும் ஆய்தம் ஒன்று, விரித்தல் விகாரத்தால் வரும் ஆய்தம் ஒன்றையும் கூட்ட முற்றாய்தம் எட்டாகும்.

எ-டு. எஃகு, அவ்+கடிய = அஃகடிய, அ+கான் = அஃகான், பிறவந்தவிடத்து உணர்க.

## உயிரளபெடை

உயிரெழுத்து, சில சமயங்களில் ஓசை நயம் காரணமாக செய்யுட்களில் தனக்கென்று விதிக்கப்பட்ட அளவைவிட நீண்டு ஒலிக்க நேர்கின்றது. உரைநடையில் அளவு நீளுவதற்குக் காரணமில்லை.

செய்யுளில் ஓசை குறையும் பொழுதும், மற்றும் இசை இன்பத்தை மிகுதியாக்கும் பொழுதும், பெயர்ச்சொல் வினை எச்சப் பொருளைத் தரவைக்கும் பொழுதும், உயிர் எழுத்து தன்னளவில் நீண்டு ஒலிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அவ்வாறு நீண்டு ஒலிக்கும் உயிர் எழுத்துக்களை உயிர் அளபடை என்று

எ-டு
1. காசு + யாது = காசியாது
2. எஃகு + யாது = எஃகியாது
3. முரசு + யாது = முரசியாது
4. சுக்கு + யாது = சுக்கியாது
5. பந்து + யாது = பந்தியாது
6. மார்பு + யாது = மார்பியாது

## குற்றியலுகரம்

குற்றியலுகரம் = குறுகிய ஓசையை உடைய உகரம். இவ் உகரம் ஆறு வகைப்படும். அவை, நெடில் தொடர் குற்றியலுகரம், ஆய்தத் தொடர் குற்றியலுகரம், உயிர்த் தொடர் குற்றியலுகரம், வன்தொடர்க் குற்றியலுகரம், மென் தொடர்க் குற்றியலுகரம், இடைத்தொடர்க் குற்றியலுகரம் என்பன.

விளக்கம் : 1) நெடில் தொடர்க் குற்றியலுகரம் : இது இரண்டு எழுத்துகளுக்கு மேல் வராது. முதல் எழுத்து உயிர் நெடிலாக அல்லது உயிர் மெய் நெடிலாக இருக்கும். இரண்டாவது அதாவது கடைசி எழுத்து வல்லின உகரங்களில் ஏதேனும் ஒன்றிருக்கும்.

வல்லின உகரம் : கு, சு, டு, து, பு, று என்ற ஆறும் ஆகும்.

எ.டு : ஆறு, ஓது, மாசு, நாகு என்பன.

2) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் : இது மூன்று எழுத்தால் வரும். முதலெழுத்து குறிலாகவும், நடு எழுத்து ஆய்தமாகவும், கடைசி எழுத்து வல்லின உகரமாகவும் இருக்கும்.

எ.டு : அஃது, கஃசு, எஃது என்பன.

3) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் : இது மூன்று எழுத்துக் களுக்கு மேல் வரும். கடைசி எழுத்து வல்லின உகரமாகவும், அவ்வுகரத்தை அடுத்துள்ள எழுத்து உயிராகவும் இருக்கும். இந்த உயிர் மெய்யின்மேல் ஏறி நின்றதாக இருக்கும். எனவே, ஈற்றயல் உயிர்மெய்யாக இருக்கும் என்பதும், அதைப் பிரித்தால் ஈற்றயலாக உயிராகவே நிற்கும் என்பதும், நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு வருவதே ஒற்றளபெடையாகும். ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் ல் வ் ஃ என்னும் பதினொரு எழுத்துக்களும் தனிக் குறிலின் பின்னும், குறிலிணையின் (இணைந்து வந்த இரண்டு குற்றெழுத்துகளின்) பின்னும், மொழிக்கு நடுவிலும், கடைசியிலும் ஆகிய நான்கு இடங்களிலும் அளபெடுத்து வரும்.

ஆய்தம் மொழிக்குக் கடைசியில் குறிலின் பின்னும், குறிலிணையின் பின்னும் ஆகிய இரண்டு இடங்களிலும் வருவதில்லை. இவ்விரண்டையும் நீக்க ஒற்றளபெடை நாற்பத்தி இரண்டாகும்.

எ-டு : 'எங்ங்கிறைவன்' குறிலின் பின்மொழி இடையில் அளபெடுத்தது.

'இலங்ங்கு வெண்பிறை' குறிலிணையின் பின் மொழி இடையில் அளபெடுத்தது.

'அகங்ங்க ணிந்த' குறிலின் பின் மொழியின் கடைசியில் அளபெடுத்தது.

'மடங்ங் கலந்த' குறிலிணையின் பின் மொழியின் கடைசியில் அளபெடுத்தது.

'எஃஃகிலங்கிய கையல்' 'லஃஃகி வீங்கி' 'இருளோட்டும்மே' குறிலின் பின்னும், குறிலிணையின் பின்னும் மொழியின் இடையிலும் அளபெடுத்தன. பிறவற்றிற்கு வந்தவிடத்துக் காண்பது நலம். ஆய்தமும் மாத்திரையில் ஒற்றெழுத்தை ஒத்திருப்பதால் ஒற்றெழுத்துக்களோடு சேர்க்கப்பட்டது.

## குற்றியலிகரம்

குற்றியலிகரம் = குறுகிய ஓசையை உடைய இகரம். இது புணர்மொழியில்தான் வரும். தனி மொழியில் வாரா.

குற்றியலுகரச் சொற்களுக்குமுன், வருமொழி முதலிய யகரம் வந்தால், நிலைமொழியில் உள்ள உகரம் இகரமாகத் திரியும். இந்த இகரம் மாத்திரையில் குறைந்து ஒலிப்பதால் இப் பெயர் பெற்றது.

இடையின உகரம் வந்தாலும் அச் சொல்லை முற்றியலுகரம் என்று கொள்ளுதல் வேண்டும்.

மெல்லின உகரம் : ஙு, ஞு, ணு, நு, மு, னு.

இடையின உகரம் : யு, ரு, லு, வு, ழு, ளு.

எ-டு : பசு, மது, எது, அணு, உழு என்பன தனிக்குறிலை அடுத்து வந்த முற்றியலுகரம்.

சோழு, வாயு முதலியனவும் முற்றியலுகரமாம் என்று உணர்தல் வேண்டும்.

## மாத்திரை

மாத்திரை : மனிதனிடம் இயல்பாக நிகழும் கண் இமைக்கும் நேரமும், விரல் நொடிக்கும் நேரமுமாகும். மாத்திரை = அளவு.

| | | |
|---|---|---|
| 1. | உயிரளபெடை மாத்திரை | 3 |
| 2. | நெடில் மாத்திரை | 2 |
| 3. | குறில் மாத்திரை | 1 |
| 4. | ஐகாரக் குறுக்கம் மாத்திரை | 1 |
| 5. | ஔகாரக் குறுக்கம் மாத்திரை | 1 |
| 6. | ஒற்றளபெடை மாத்திரை | 1 |
| 7. | மெய் (உடல்) மாத்திரை | ½ |
| 8. | குற்றியலிகரம் மாத்திரை | ½ |
| 9. | குற்றியலுகரம் மாத்திரை | ½ |
| 10. | ஆய்தம் மாத்திரை | ¼ |
| 11. | மகரக்குறுக்கம் மாத்திரை | ¼ |
| 12. | ஆய்தக் குறுக்கம் மாத்திரை | ¼ |

## இன எழுத்துக்கள்

பிறக்கும் இடம், தொழில், அளவு, பொருள், வடிவம் ஆகிய இவற்றுள் ஒன்றினாலோ அல்லது பலவாலோ ஒத்திருந்தால் இனம் என்று கொள்ளுதல் வேண்டும்.

எ-டு பாலாறு (பா + ல் + ஆ + று)
முரசு (மு + ர் + அ + சு)
உலகு (உ+ ல் + அ + கு)

பிறவும் இவ்வாறே கொள்ளுதல் வேண்டும்.

4) வன்தொடர்க் குற்றியலுகரம் : இது மூன்றெழுத்திற்குக் குறையாமல் வரும். கடைசி எழுத்து வல்லின உகரமாகவும், அதற்கு அயல் (பக்கம்) வல்லின மெய்யாகவும் இருக்கும்.

எ-டு : சுக்கு, மச்சு, பத்து.

5) மென்தொடர்க் குற்றியலுகரம் : வன்தொடர்க் குற்றியலுகரம் போலவே மூன்று எழுத்திற்குக் குறையாமல் வரும். கடைசி எழுத்து வல்லின உகரமாகவும், அயல் எழுத்து மெல்லின மெய்யாகவும் இருக்கும்.

எ-டு : சங்கு, சான்று, பந்து.

6) இடைத்தொடர்க் குற்றியலுகரம் : வல்லின மெல்லின குற்றியலுகரங்களைப் போன்றே மூன்று எழுத்துக்குக் குறையாமல் வரும். அவற்றைப் போன்றே கடைசி எழுத்து வல்லின உகரமாகவும், அயல் எழுத்து இடையின மெய்யாகவும் இருக்கும்.

எ-டு : சால்வு, மார்பு, எய்து.

இக்குறிப்புகளை நினைவில் கொண்டு ஆறு தொடர் குற்றியலுகரங்களுக்கு ஏற்ற எடுத்துக் காட்டுகள் பல எளிதில் கண்டறிய முடியும் என்பது உண்மை.

## முற்றியலுகரம்

முற்றியலுகரம் = மாத்திரையில் குறையாத உகரம். தனிக் குறிலை அடுத்து எந்த இனத்து உகரம் வந்தாலும் அது முற்றியலுகரமாகும். சொல்லின் கடைசியில் மெல்லின உகரம்,

## இறுதிநிலை

இறுதி = கடைசி. ஒரு மொழியில் கடைசியில் நிற்கும் எழுத்துக்கள் எவை என்பதையும் நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

எகரம் நீங்கிய பதினொரு உயிரும், ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்ற பதினொரு மெய் எழுத்துக்கள் மொழியின் இறுதியில் வரும்.

எ-டு : பல, பலா, கரி, தீ, கொடு, பூ, சே, நகை, நொ, கோ, கௌ, உரிஞ், கண், வெறிந், அறம், பொன், தாய், பார், கால், தெவ், வாழ், கேள் என்ற எழுத்துகளைத் தவிர வேறு எழுத்துக்கள் தமிழ் மொழியில் கடைசியில் வந்து பொருந்துவதில்லை. பொருந்தி வந்தால் பிற மொழிச் சொற்கள் என்று எண்ணுதல் வேண்டும்.

## இடைநிலை மயக்கம்

மொழிக்கு நடுவில் வந்து பொருந்தும் எழுத்துக்கள். இதை இடைநிலை மயக்கம் என்றும் கூறலாம். மயக்கம் = எழுத்துப் புணர்ச்சி. இம் மயக்கம் மூன்று வகைப்படும். அவை :

1. உடனிலை மயக்கம் (தன்னோடு தானே புணர்தல்).
2. வேற்றுநிலை மயக்கம் (தன்னோடு பிறவே புணர்தல்)
3. இருவகை நிலை (தன்னோடு தானும், பிறவும் புணர்தல்)

விளக்கம் : க் ச் த் ப் என்ற நான்கு மெய்களோடு அந்த நான்கு மெய்களே முறையாக வந்து புணர்தல் உடனிலை மயக்கமாகும்.

ர் ழ்- என்ற இரண்டு மெய்களோடு வேறு மெய்களே வந்து புணர்தல் வேற்று நிலை மயக்கமாகும்.

க் ச் த் ப் ர் ழ் - என்ற மெய்கள் அல்லாத பிற மெய்களோடு நின்ற மெய்களோ அல்லது வேறு மெய்களோ வந்து புணர்தல் இருவகை நிலை மயக்கமாகும்.

எ-டு : **உடனிலை:** பக்கம், அச்சம், அத்தன், அப்பன் என்பன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆ | ஈ | ஊ | ஏ | ஐ | ஓ | ஔ |
| அ | இ | உ | எ | இ | ஒ | உ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ச் | ட் | த் | ப் | ற் |
| ங் | ஞ் | ண் | ந் | ம் | ன் |

விளக்கம் : உயிர் : பிறப்பிடம், முயற்சி ஆகியவற்றால் ஒத்துவரும்.

மெய்: முயற்சி, அளவு ஆகியவற்றால் ஒத்து வரும். அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஒ, ஓ, ட, ண, ப, ம முதலியன பொருளால் ஒத்து வரும்.

அ, ஆ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ என்பன வடிவத்தால் ஒத்து வரும்.

## முதனிலை

முதல் + நிலை = முதனிலை, மொழிக்கு முதலில் நிலைக்கும் எழுத்துக்கள். மொழி, பதம், சொல் என்பன ஒரு பொருள் சொற்களே. ஒரு சொல்லில் முதலில் வரும் எழுத்துக்கள் எவை என்பதைத் தெரிந்து கொண்டால்தான் வாக்கியப் பிழை இல்லாமலும், கருத்துப் பிழை இல்லாமலும் எழுத முடியும் என்பதை நாம் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும், க ச த ந ப ம வ ய ஞ ங என்ற பத்து உயிர் மெய் எழுத்துக்களே ஒரு மொழிக்கு முதலில் வரும். வேறு எழுத்துக்கள் சொல்லுக்கு - முதலில் வந்தால் அந்தச் சொல் தமிழ்ச்சொல் அல்ல என்பதை நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

எ-டு : அண்ணன், ஆடை, இறைவன், ஈன்றாள், உலகம், ஊக்கம், எல்லை, ஏற்றம், ஐவர், ஒன்று, ஓது, ஔவை. பன்னிரண்டு உயிரும் மொழிக்கு முதலில் வந்து உள்ளன.

கன்று, சங்கம், தந்தை, நண்பன், பழம், மன்றம், வயல், யவனர், ஞமலி, அங்ஙனம் இவ்வாறே நெடில் முதலில் உயிர்மெய் எழுத்துக் களுக்கு ஏற்ற எடுத்துக்காட்டுகளைத் தேட முயல்வீராக.

## போலி

ஒரு சொல்லில் ஓர் எழுத்து நிற்கும் இடத்தில், அதற்கு ஈடாக வேறோர் எழுத்து நின்றாலும் பொருள் வேறுபடாமல் இருப்பது போலி எனப்படும். போலி = போல நிற்பது.

இன்ன பால் என்று கூறமுடியாத அஃறிணைப் பெயர்களின் கடைசியில் இரண்டு குற்றெழுத்துக்களை அடுத்து வரும் மகர மெய்க்கு னகரமெய் போலியாய் வரும். இது கடைப் போலியாகும்.

எ-டு : அறம்-அறன், நிலம்-நிலன், நலம்-நலன், மனம்-மனன், குணம்-குணன் என்பன.

போலி மூன்று வகைப்படும். அவை முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி என்பன. முதற்போலி = முதல் எழுத்து மாறி நிற்பது. இடைப்போலி = நடு எழுத்து மாறி நிற்பது. கடைப்போலி = கடைசி எழுத்து மாறி நிற்பது.

ககர, ஞகர, யகர உயிர் மெய்களுக்கு முன் வரும் அகரமும், ஐகாரமும் தம்முள் (பொருளில்) யாதொரு வேறுபாடும் இல்லாமல் ஒத்து வருவது முதற்போலியாகும்.

எ.டு. பசாசு - பைசாசு
மஞ்சு - மைஞ்சு     முதற்போலி
மயல் - மையல்

அமச்சு - அமைச்சு
இலஞ்சி - இலைஞ்சி     இடைப்போலி
அரயர் - அரையர்

## சொல்

மொழி-பதம்-சொல் என்பன ஒரு பொருள் சொற்கள். ஓர் எழுத்துத் தனித்தாகிலும், தொடர்ந்தாகிலும் பொருளைக் குறித்து வருவது சொல்லாகும் அல்லது பதமாகும்.

**வேற்றுநிலை** : சார்பு, வாழ்வு என்பன.

**இருவகையில் உடனிலை** : நாட்டம், நாற்றம், அங்ஙனம், மஞ்ஞை, அண்ணன், செந்நாய், அம்மா, பொன்னி, செய்யாள், நல்லோன், தெவ்வர், மள்ளர் என்பன..

**இருவகையில் வேற்றுநிலை** : திட்பம், வெற்பு, தங்கம், பஞ்சு, தண்டை, தந்தான், அம்பி, கன்று, செய்வான், சால்பு, தெவ்யாது, கொள்வாய் என்பன.

சிலவற்றிற்குச் சிறப்பு விதி :

1. ஙகர மெய்முன் - ககரமெய் வரும்.

2. வகர மெய்முன் - யகரமெய் வரும்.

3. ஞகர மெய்முன் - சகர, யகர, மெய்கள் வரும்.

4. நகர மெய்முன் - தகர, யகர மெய்கள் வரும்.

5. டகர மெய்முன் -ககர, சகர, பகர மெய்கள் வரும்.

6. றகர மெய்முன் - ககர, சகர, பகர மெய்கள் வரும்.

7. ணகர மெய்முன் - டகர, ககர, சகர, ஞகர, பகர, மகர, ஞகர, வகர மெய்கள் வரும்.

8. னகர மெய்முன் - ணகர மெய்முன் வரும் எழுத்துகளே வரும்.

9. மகர மெய்முன் - பகர, யகர, வகர மெய்கள் வரும்.

10. யகர, ரகர, ழகர - மெய்களின் முன் - மொழிக்கு முதலில் வரும் மெய்கள் எல்லாம் வரும்.

லகர மெய்முன் - ககர, சகர, பகர, வகர, யகர, மெய்கள் வரும்.

குறிப்பு : யகர, ரகர, ழகர மெய்களின் முன் க், ச், த், ப், ங், ஞ், ந், ம் - என்ற எட்டு மெய்களும் சில இடங்களில் ஈரொற்றாகவும் (இரண்டு மெய்கள் பெற்றும்) வரும்.